

## முனைவர் கி. துர்காதேவி

சென்னை

உதவிப் பேராசிரியராக வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் பணியாற்றுகிறார். **சங்கத் தமிழக நகரங்கள், சங்க இலக்கிய ஆய்வுமலர்கள், பண்டைத் தமிழ் இலக்கியங்கள், இளைப்பில்லை காண், வண்ணமும் எண்ணமும்** போன்ற ஆய்வு நூல்களையும் **பால் குடிக்கும் கவிதைகள், கு..குக்கூ,, மின்மினிக் கவிதைகள், கவிப்பரல்கள்** போன்ற கவிதை மற்றும் ஹைகூ நூல்களையும் எழுதியுள்ளார். அறுபதுக்கும் மேலான ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

*எழுதப்படாத பாடல் ஏங்கிநிற்க*
*வருடாதத் தென்றலாய்*
*நுகராத வாசமாய்*
*காத்திருக்கிறது தாய்மை*

♠



*சிரித்ததை நினைத்து அழுதும்*
*அழுததை நினைத்துச் சிரித்தும்*
*ஒவ்வொரு நாளாய் நகர்கிறது*
*காதல் அனுபவம்*

♠

*தெள்ளுத்தமிழ் துணை இருந்தும்*
*சொல்வதற்கு சொல்லும் இல்லை*
*வார்த்தையும் இல்லை*
*மௌனத்திற்கு*

♠

எழுதுகோலும் காகிதமும்
எடுப்பதற்குள் நினைவுதப்பி
ஏனோ மறைந்து விடுகின்றன
கானல் கவிதைகள்

♠



நேசிப்பின் பிரிவினால் வழியின்றி
வாசிப்பின் கைநழுவி உனக்காய்
இன்னமும் காத்திருக்கிறது
உனக்கானக் கவிதை

♠

கொந்தளிக்கும் உணர்வுக்குருதியில்
பிடித்துக் கொண்டிருக்கிறாள்
இறுக்கமாய் என்ஆவியை
காதல் தேவதை

♠

பெற்றெடுத்தாலும் இல்லையென்றாலும்
தன்னிகரில்லா தாய்மையென்பது
தனக்காய் அல்லாமல்
பிறருக்காய்த் துடிப்பதே

♠

சிரித்ததை நினைத்து அழுதும்
அழுததை நினைத்துச் சிரித்தும்
சிறிது சிறிதாய் சேர்கிறது
நம் அனுபவம்

♠

